15.10.2025 OS.No. 88/2019 in IA.8/2023

சாட்சி :  PW.1 பாபு

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**6 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்த உயில் சான்றிட்ட நகல் என்றால் சரிதான், அசல் உயில் யார் வசம் உள்ளது என்றால் என்வசம் தான் உள்ளது, அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சான்றிட்ட நகல் 01.09.2023 ல் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த உயிலில் எழுதிக் கொடுத்தவரின் விலாசம் காரைக்குடி விலாசம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உயிலில் என்னை நண்பர் மற்றும் பாதுகாவலராகத்தான் எழுதிக் கொடுத்தவர் காண்பித்துள்ளார் என்றால் சரிதான். எனக்கும் அவருக்கும் உறவு முறை கிடையாது என்றால் சரிதான். மேலும் உயிலில் தனியாக சொத்து விபரம் எதுவும் காண்பித்து எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த உயிலில் என் மேல் உள்ள பிரியத்தினாலோ அல்லது அன்பினாலோ உயில் எழுதிவைக்கப்பட்டதாக எந்த வாசகமும் காண்பித்து எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் பாதுகாவலராக நான்தான் கவனித்து வந்ததாக சொல்லப்பட்டு எழுதப்பட்டுள்ளது. தாவாச் சொத்து தவிர வேறு சொத்துக்களையும் அடைந்து கொள்ளவேண்டியது என உயிலில் காட்டப்பட்டுள்ளது, அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

2. மேற்படி உயிலில் கண்ட சொத்தை நான் நேரடியாக பார்வையிட்டுள்ளேனா என்றால் ஆமாம், 2021 ல் பார்த்திருக்கிறேன். மேற்படி உயிலில் எந்த சார்பு பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட போது நான் உடன் இருந்தேனா என்றால் தேவகோட்டை சார்பு பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது, நானும் உடன் இருந்தேன். பத்திரம் எழுதும் அலுவலகத்திலும் நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். வாசகங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நாராயணன் சொல்லி எழுதப்பட்டது. மேற்படி உயில் எழுதிய காலத்தில் அவர் காரைக்குடியில் இருந்தாரா அல்லது பொள்ளாச்சியில் இருந்தாரா என்றால் காரைக்குடியில் இருந்தார். உயிலில் எழுதப்பட்ட வாசகம் நண்பர் மற்றும்

பாதுகாவலர் என்பது குறிப்பிட்டு வேறு ஏதேனும் ஆவணம் அவர் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, நான் பாதுகாவலர் என்பதற்கான புகைப்படங்கள் மட்டும் உள்ளது. உயில் எழுதிய காலத்தில் நாராயணனுக்கு சுமார் 80 வயது என்றால் சரிதான்.

3. நாராயணனுடைய சொந்த ஊர் கல்லல் என்றால் சரிதான். அவர் நிரந்தரமாக வசித்தது காரைக்குடியா என்றால் காரைக்குடியில் வசித்தார், பின்பு சிவகங்கையிலும் வசித்தார். அந்த உயிலில் சாட்சி கையெழுத்து செய்தவர்கள் யார் என்றால் இருவரில் ஒருவரை நாராயணன் அழைத்து வந்தார், மற்றொருவரை நான் அழைத்து வந்தேன். ம.சா.ஆ.1 ஆன நாராயணன் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழில் இறந்தவரின் நிரந்தர முகவரி காரைக்குடி என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, காண்பிக்கப்பட்டுள்ளது. நாராயணனின் மனைவி இறந்ததற்கான இறப்புச் சான்றிதழை 09.07.2025 ல் நான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், அது ம.சா.ஆ.3 ஆகும். ம.சா.ஆ.3 ல் இறந்த வருடமாக 2011 என காண்பிக்கப்பட்டுள்ளதில் இறந்த இடம் பொள்ளாச்சி என காண்பிக்கப்பட்டு, நிரந்தர முகவரி காரைக்குடி என காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. ம.சா.ஆ.4 ல் நான்காவது பெயராக என்னை காண்பித்து சகோதரர் என்று உறவுமுறை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் எழுதி வைத்த உயிலில் சகோதரர் என காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்தில் நற்கனி பெட்ரோலியம் ஏஜென்சி என்ற பெயரில் பெட்ரோல் பங்க் இயங்கி வருகிறது என்றால் சரிதான். அது 6 ம் பிரதிவாதி இளஞ்செழியனுக்கு பாத்தியமானது என்றால் சரிதான். அந்த இடத்தில் 2005 லிருந்து அந்த பெட்ரோல் பங்க் இயங்கி வருகிறது என்றால் சரிதான். வழக்கு நடத்தும் முழுச் சொத்தும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியமாகி 60 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த 2 ம் பிரதிவாதி வகையறாக்களிடம் 6 ம் பிரதிவாதி 10 ஆயிரம் சதுரடி இடத்தை கிரையம் வாங்கி 7 ம் பிரதிவாதியிடம் லீஸ் அக்ரிமெண்ட் செய்து பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்து எந்த ஊராட்சிக்கு உட்பட்டது என்றால் தேவபட்டு ஊராட்சிக்கு உட்பட்டது.

5. 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு அவருக்கு பட்டா ஏற்பட்டு அவரே வரியை தேவபட்டு ஊராட்சிக்கு செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனக்கு உயில் எழுதிக் கொடுத்த நாராயணனுக்கு தாவாச் சொத்தில் பாத்தியமே இல்லை என்று சொன்னால் நாராயணன் எனக்கு பாத்தியம் என்று கூறினார். பாத்தியம் இல்லாத சொத்தை நாராயணன் எனக்கு உயில் எழுதிக் கொடுக்க நாராயணனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் நிரந்தரமாக பொள்ளாச்சியில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு உயில் எழுதிக் கொடுத்த நாராயணன் நிரந்தரமாக காரைக்குடியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும், நாராயணனுக்கு எதன் அடிப்படையில் பழக்கம் ஏற்பட்டது என்றான் எனக்கு 2003ல் திருமணம் நடந்ததில் இருந்து, என் மனைவியின் தாயாரும் நாராயணன் மனைவி வசந்தாவும் தூரத்து சொந்தம் என்ற அடிப்படையில் பழக்கம் ஏற்பட்டது.

6. மேற்படி குறிப்பிட்ட விபரத்தை உயிலிலோ, நான் தாக்கல் செய்த மனுவிலோ, முதல் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உயில் எழுதி வைப்பதற்கு முன்பு சொத்து சம்மந்தமாக வில்லச்சான்று போட்டு பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. எனக்கு கல்லலில் உறவினர்கள் உள்ளார்களா என்றால் கல்லல் பக்கத்தில் அச்சனீ–யில் உறவினர்கள் உள்ளார்கள். கல்லலில் உள்ள என் உறவினர்கள் மேற்படி சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உயில் மற்றும் நான் தாக்கல் செய்த இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவையும் வேறு ஆவணங்களும் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மோசடியாக தயார்செய்யபட்ட உயிலை வைத்து நான் வழக்கின் 2ம் வாதியாக வழக்கை நடத்த எனக்கு அறுகதை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. சொத்தின் மதிப்பு அதிகம் என்பதால் அதை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நானும் , என் உறவினர்கள் ஆவணங்களை மோசடியாக எற்படுத்தி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்கள் அனைத்து முன்னேற்பாடாக எடுக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.